www.padippakam.com

**Tamil Papers 08th January 2009**

**LTTE banned,**
Virakesari 08-01-2009

# புலிகள் மீது தடை

## குற்றவாளியாக இனங்காணப்பட்டால் 20 வருட சிறைத்தண்டனை

(அ.கனகராஜா)

அரசாங்கம், தமிழீழ விடுதலைப் புலிகளை நேற்று முதல் தடை செய்துள்ளது. ஜனாதிபதி தலைமையில் நேற்று மாலை கூடிய அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்த முடிவு ஏகமனதாக எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் நேற்றிரவு உத்தியோகபூர்வமாக அறிவித்தது. வடக்கு - கிழக்கு மக்களைப் பலவந்தமாக இணைத்துக் கொண்டு, அவர்களது வாழ்க்கைச் சுதந்திரத்தை மீறி அங்கிருந்து வெளியேற முடியாமல் தடுத்து வைத்திருப்பது அவர்களின் வாழ்க்கைச் சுதந்திரத்தை பாதிப்பதாகவும் (08 ஆம் பக்கம் பார்க்க)

**புலிகள்மீது...** (தொடர்ச்சி)

இதனால் பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் தமிழீழ விடுதலைப் புலிகள் தடை செய்யப்பட்டது என்றும் அரசாங்கம் நேற்று திட்டவட்டமாக அறிவித்தது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்றிரவு நடைபெற்ற அமைச்சரவை முடிவை அறிவிக்கும் விசேட ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது. இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர்களான அனுர பிரியதர்ஷன யாப்பா, நிமல் சிறிபால டி சில்வா, மைத்திரிபால சிறிசேன, ரோஹித போகொல்லாகம, மகிந்த சமரசிங்க, அத்தாவுல்லா ஆகியோர் பங்கேற்றனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் 2009ஆம் ஆண்டு ஜனவரி 7ஆம் திகதி அன்று கையொப்பமிட்டு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட (40ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 5ஆம் பிரிவின் கீழான அறிவித்தலின் பிரகாரம்,

**அறிவித்தல்**

1. இந்த அறிவித்தல் 2009 இல. 1 அவசரகாலச் சட்டம் (தமிழீழ விடுதலைப் புலிகளை தடைச் செய்தல்).

2. தமிழீழ விடுதலைப் புலிகள் பெயர் கொண்ட அமைப்பு இதன் மூலம் தடை செய்யப்படுகின்றது.

3. இலங்கைக்குள் அல்லது அதற்கு வெளியில் யாராவது தமிழீழ விடுதலைப் புலிகள் அல்லது அந்த அமைப்புக்காக செயற்படுகின்ற அமைப்பு

(i) உறுப்பினர் அல்லது சிப்பாயாக இருத்தல்

(ii) தலைமை வகித்தல்

(iii) சீருடை, - இலச்சினை, கொடி, விளம்பரப்படுத்தல், ஏற்றுதல் மற்றும் ஆயுததாரிகளை வைத்திருத்தல்

(iv) கூட்டங்களை கூட்டுதல், கூட்டம் அல்லது அதில் பங்குபற்றல்

(v) உறுப்பினராக இருத்தல் அல்லது சேர்த்தல்

(vi) உறுப்பினர், சிப்பாய் அல்லது வேறு வழிகளில் பாதுகாப்பு வழங்குதல், மறைத்து வைத்தல், உதவி செய்தல்.

(vii) வன்முறை செய்தல், ஊக்கப்படுத்தல் உதவி வழங்குதல், ஆலோசனை வழங்குதல் மற்றும் அதற்காக செயற்படுதல்.

(viii) ஏதாவது நடவடிக்கை அல்லது சம்பவத்தை அமைத்தல் அல்லது பங்கேற்றல்.

(ix) நிதி அல்லது உபகரணங்கள் பாவித்தல்.

(x) உபகரணை வழங்குதல் களஞ்சியப் படுத்தல், போக்குவரத்தில் ஈடுபடுதல் அல்லது விநியோகித்தல்.

(xi) ஏதாவது காரணத்திற்காகவோ உறுப்பினருக்கு நிவாரணம் வழங்குதல்.

(xii) ஏதாவது காரணத்திற்காக கொடுக்கல்- வாங்கல் நடவடிக்கையில் ஈடுபடுதல்.

(xiii) அதற்கான தகவல்களை பிரசாரப் படுத்துவதற்காக முயற்சித்தல்.

4. இந்த அறிவித்தலில் 3 ஆவது அறிவித்தலை மீறி நடப்பவர் குற்றவாளியாவார் என்பதுடன் கொழும்பிலுள்ள மேல் மாகாண நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாக இனங்காணப்பட்டு 20 வருடத்திற்கு குறையாத வகையில் சிறைத் தண்டனை வழங்கப்படும்.

5. தவறிழைத்தல், தவறிழைக்கத் தூண்டுதல் அதற்காக உதவுதல், அந்த நடவடிக்கைகளுக்கான சூழ்ச்சிகளை மேற்கொள்ளுதல் குற்றமாகும். அவ்வாறானவர்களுக்கு 10 வருடங்களுக்கு குறைவான சிறைத் தண்டனை வழங்கப்படும்.

6. தனி சபையின் அறிவித்தலின் மூலமாக ஏதாவது தவறிழைத்தால் அந்த தவறை இழைப்பதற்காக நேரடியாக பொறுப்பு கூற வேண்டியவர்

(1) சபையின் பெயர், அந்த சபையின் பணிப்பாளர்கள் மற்றும் நிறைவேற்று அதிகாரி

(2) அது கூட்டிணைந்த நிறுவனமாயின் பங்குதாரர்கள் மற்றும் நிறைவேற்று அதிகாரி

(3) தனிச் சபையாயின் தனி நபர், குழு அல்லது நிர்வாக சபை, நிர்வாகத்திற்கு பொறுப்பு கூறவேண்டிய சகல அதிகாரிகளும் குற்றவாளிகளாக இனங்காணப்படுவார்கள்.

7. (1) தடை செய்யப்பட்ட அமைப்பிற்காக பயன்படுத்தப்படுகின்ற நிதி அல்லது கடன் தொடர்பிலான நடவடிக்கைகள் அமைச்சர் ஒருவரினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(2) (1) உப தலைப்பின் கீழ் கூறப்பட்டது போல அமைச்சர் ஒருவரின் தீர்மானம் இறுதியானதாகும். அவர் தொடர்பில் எந்த நீதிமன்றத்திலும் விசாரணைகளை மேற்கொள்ள முடியாது.

(8) (அ) இலங்கை அரசாங்கத்துடன் ஒப்பந்தங்களை செய்துகொண்ட பொதுமக்கள் பாதுகாப்பு தொடர்பான அமைச்சர் அல்லது அமைச்சின் செயலாளரினால் - அவசர வைத்திய சேவை அல்லது வசதி வாய்ப்புகளை பெற்றுக்கொடுத்தல் அல்லது அத்தியாவசிய சேவைகளை மேற்கொள்ளல் உள்ளிட்ட மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கும் வகையில் சர்வதேச அமைப்புகளின் உரிமையாகும்.

(ஆ) நாட்டிற்குள் முன்னெடுக்கப்படுகின்ற பயங்கரவாத நடவடிக்கைகளினால் இலங்கை அரசாங்கம் முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு அல்லது நிறுத்துவதற்கான நோக்கத்திற்காக ஜனாதிபதியினால் ஏதாவது பேச்சுவார்த்தை அல்லது நடவடிக்கைகளுக்கான முழு அதிகாரமும் ஜனாதிபதிக்கே வழங்கப்பட்டுள்ளது.

**Minor blast in Mount lavinia**
Virakesari 08-01-2009

# ரயில் நிலையத்துக்கு அருகில் குண்டுவெடிப்பு; பாதை சிறுசேதம்

## - கல்கிசையில் சம்பவம்

(ஜே.ஜி. ஸ்டீபன்)

கல்கிசை ரயில் நிலையத்துக்கு அருகில் நேற்றிரவு 7.00 மணியளவில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் ரயில் பாதை சிறிய சேதத்துக்கு உள்ளாகியுள்ளது. கரையோரப் பகுதி ரயில் (08 ஆம் பக்கம் பார்க்க)

**ரயில்...** (தொடர்ச்சி)

சேவையை இலக்குவைத்தே இந்தக் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக சந்தேகம் நிலவுகின்றது. இருப்பினும், உயிர்ச்சேதங்கள் எதுவும் இடம்பெறவில்லையென பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

கல்கிஸை - பீரிஸ் மாவத்தை பகுதியில் அமைந்துள்ள ரயில் நிலையத்துக்கு அருகிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் ரயில் பாதையில் சிறுசேதம் ஏற்பட்டுள்ளது. இதனால், கரையோர ரயில் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதாக கொழும்பு ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் அறிவித்தது.

சம்பவம் தொடர்பில் கல்கிசை பொலிஸார் தேடுதல் மற்றும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

படிப்பகம்

**Tamil Youth arrested**
Virakesari 08-01-2009

## தமிழ் இளைஞன் கைது

(மூ.மேனகா)

பண்டாரவளை, பூனாகல தோட்டம் பகுதியில் தமிழ் இளைஞன் ஒருவர் பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பொலிஸ் பிரிவில் கடமையாற்றியவர் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடக பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சருமான ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் மாவட்ட பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் தரப்பில் கிருஷ்ணா என்று அழைக்கப்படும் இந்த சந்தேக நபர் புறக்கோட்டையில் அமைந்துள்ள பழக்கடை ஒன்றிலும் வெகு நாட்களாக கடமையாற்றியுள்ளார் என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

**Tamil Youth arrested**
Virakesari 08-01-2009

## சந்தேகத்தில் தமிழ் இளைஞர் கைது

செங்கடகல,

கட்டுகஸ்தோட்டை நகரப்பகுதியில் சந்தேகத்திற்கிடமான வகையில் நடமாடிய தமிழ் இளைஞர் ஒருவரை கட்டுகஸ்தோட்டை பொலிஸார் நேற்று முன்தினம் மாலை கைது செய்துள்ளனர்.

சுப்ரமணியம் ஜோசப் (வயது 27) என்ற இளைஞரே இவ்வாறு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த இளைஞர் பன்வில ஹாத்தலை மேல்பிரிவு தோட்டத்தைச் சேர்ந்தவர் என்றும் அவரிடம் சோதனை மேற்கொண்டபோது கொழும்பு மட்டக்குளி பிரதேசத்திலுள்ள முகவரி காணப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபரை தடுத்து வைத்து கட்டுகஸ்தோட்டை பொலிஸார் இவர் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**Elder couple cut and wounded**
Virakesari 08-01-2009

## வயோதிபத் தம்பதியினரின் கழுத்தையும் காதையும் வெட்டிய கொள்ளையர்கள்

### வாழைச்சேனையில் சம்பவம்

ஏறாவூர்,

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த வயோதிபத் தம்பதியினரின் கழுத்தையும் காதையும் இனந்தெரியாத ஆயுததாரிகள் வெட்டி விட்டுச் சென்ற சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது. இச்சம்பவம் நேற்று அதிகாலை 1 மணியளவில் நடைபெற்றிருக்கலாமென பொலிஸார் சந்தேகிக்கின்றனர். வாழைச்சேனை (10 ஆம் பக்கம் பார்க்க)

(தொடர்ச்சி)

**வயோதிபத்...**

புதுக்குடியிருப்பு பிரதேசத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற கிராமசேவை உத்தியோகத்தரான சொலமன் செபரெத்தினம் (65 வயது) மற்றும் இவரின் மனைவி சோதிமலர் அரியமலர் (60 வயது) என்ற தம்பதியரின் கழுத்தும், காதுமே வெட்டப்பட்டு ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் இருவரும் தங்கியிருந்த வீட்டில் இருக்கும் பொருட்களைக் கொள்ளையடித்துக் கொண்டு செல்வதற்காக வந்த இந்த இனந் தெரியாத ஆயுததாரிகள் வீட்டில் இருந்த பொருட்களைக் கொள்ளையடித்து விட்டு வயோதிபர்கள் இருவரின் கழுத்தையும் காதையும் வெட்டி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

அயலவர்கள் நேற்றுக் காலை 5 மணியளவில் இவர்களைச் சென்று பார்த்தபோது வெட்டுக்காயங்களுடன் இரத்தம் வழிந்த நிலையில் இவர்கள் வீட்டினுள் இருப்பதைக் கண்டுள்ளனர்.

இதன் பிறகு அயலவர்கள் மற்றும் குடும்ப உறவினர்களின் உதவியுடன் இவர்கள் முதலில் வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் அவசர சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

www.padippakam.com

## 10,000 Civilians displaced to Mullaithievu

Thinakkural 08-01-2009

# கொட்டும் மழையில் 10 ஆயிரம் பேர் முல்லைத்தீவு நோக்கி இடம்பெயர்வு

**ரொஷான் நாகலிங்கம்**

கிளிநொச்சியில் இடம்பெறும் மோதல் நிலைமை காரணமாக சுமார் 10 ஆயிரம் பேர் கொட்டும் மழையிலும் கிளிநொச்சி கிழக்கு மற்றும் முல்லைத்தீவு நோக்கி இடம்பெயர்வதாக அம்மாவட்ட அரச அதிபர் என். வேதநாயகன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஷெல் வீச்சு காரணமாக வட்டக்கச்சி, ஊரியான், முரசுமோட்டை, கோரகண்கட்டு மற்றும் கண்டாவளை பிரதேசங்களில் உள்ள சுமார் 10 ஆயிரம் பேர் முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் கிளிநொச்சி மேற்குப் பகுதிக்கும் இடம்பெயர்ந்துள்ளனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கடும் மழை பெய்த நிலையில் மழையில்

6ஆம் பக்கம் பார்க்க...

### கொட்டும்...

(முன்பக்கத் தொடர்ச்சி)

நனைந்தபடி பொதுமக்கள் இடம்பெயர்ந்து வருவதை நாம் காணக்கூடியதாகவிருந்தது.

இவ்வருடத்துக்கான முதல்வார நிவாரணப் பொருட்களை நாம் தற்போது விநியோகித்து வருகின்றோம். செஞ்சிலுவைச் சங்கம் வழித்துணை சேவையை வழங்காமையினால் வன்னிக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டு 20 உணவு லொறிகளில் வவுனியாவிலிருந்து கிளிநொச்சிக்கு வரமுடியாத நிலைமையேற்றபட்டுள்ளது. இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு உலக உணவுத் திட்டத்தின் பொருட்களை எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், கடந்த வெள்ளிக்கிழமை முதல் போக்குவரத்து இல்லாமையினால் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்துக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை முடிவுகள் கிடைக்கவில்லை. எனினும் தமது பரீட்சை முடிவுகளை மாணவர்கள் இணையத்தளம் ஊடாக பார்வையிட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## Dead body recovered with cut injuries

Thinakkural 08-01-2009

# அன்னமலை குடியிருப்பில் வெட்டுக்காயத்துடன் சடலம்

**திருக்கோவில் நிருபர்**

அம்பாறை, அன்னமலை குடியிருப்பு பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை பலத்த வெட்டுக்காயங்களுடன் குடும்பஸ்தர் ஒருவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குடியிருப்பு பகுதியில் மதகு ஒன்றின் கீழிருந்தே இந்தச் சடலம் கண்டுபிடிக்கப்பட்டு பின்னர் கல்முனை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

கொல்லப்பட்டவர் அன்னமலை-2ஐச் சேர்ந்த ஈஸ்வரன் (50வயது) என்ற 8 பிள்ளைகளின் தந்தையெனத் தெரிவிக்கப்படுகிறது.

இவரது சடலம் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## ICRC back to the service in Vanni

Thinakkural 08-01-2009

# வன்னிக்கான வழித்துணை சேவையில் மீண்டும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்

**ரொஷான் நாகலிங்கம்**

கடந்த ஐந்து நாட்களின் பின்னர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நேற்று புதன்கிழமை அரச கட்டுப்பாடற்ற பகுதிக்கும் கட்டுப்பாட்டுப் பகுதிக்குமிடையில் வழித்துணை சேவையில் ஈடுபட்டது.

படையினரும் விடுதலைப் புலிகளும் உறுதிமொழி வழங்கியதையடுத்தே வழித்துணை சேவையில் ஈடுபட்டதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் ரொசி விஜேயவர்த்தன தெரிவித்தார்.

அத்துடன், நேற்று புதன்கிழமை ஒன்பது அம்புலன்ஸுக்கு வழித்துணை வழங்கியதையடுத்து 47 நோயாளர்கள் சேவையைப் பெற்றதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இச்சேவை இன்று வியாழக்கிழமையும் வழங்கப்படும் பட்சத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான 40 உணவு லொறிகள் செல்லுமென அம்மாவட்ட செயலகங்களின் வவுனியா இணைப்பு கிளை அலுவலகங்கள் தெரிவித்தன.

இது இல்லாதிருக்க உலக உணவுத்

6ஆம் பக்கம் பார்க்க...

www.padippakam.com

## வன்னி...

(முன்பக்கத் தொடர்ச்சி)

திட்டத்தின் லொறிகளும் வவுனியாவிலிருந்து வன்னிக்கு செல்லுமெனவும் தெரியவருகின்றது.

கடந்த சனிக்கிழமை கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை முடிவுகள் வெளியான போதும் வன்னிக்கான வழித்துணை சேவை வழங்கப்படாததையடுத்து பாடசாலைகளுக்கான பரீட்சை முடிவுகள் தபால் மூலம் எடுத்துச் செல்லப்படவில்லை. இவையும் நாளை எடுத்துச் செல்லப்படலாமெனவும் தெரியவருகின்றது.

பரீட்சை முடிவுகளை கடந்த சனிக்கிழமை கொழும்பு மற்றும் ஜெயவர்தனபுர கல்வி வலயப் பாடசாலைகளுக்கு பரீட்சைகள் திணைக்களம் வழங்கிய நிலையில் ஏனைய கல்வி வலயங்களுக்கான பரீட்சை முடிவுகளை தபாலில் அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**04 Youths arrested**
Thinakkural 08-01-2009

# வேட்டைக்குச் சென்ற நால்வர் வவுனியா இராணுவத்தால் கைது

வவுனியாவில் வேட்டைக்குச் சென்ற இளைஞர்கள் நால்வர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று புதன்கிழமை காலை 7 மணிக்கு சாஸ்திரி கூழாங்குளம், புதுக்குளம் பகுதியைச் சேர்ந்த 4 இளைஞர்கள் வேட்டைக்குச் சென்றதாகவும், இவர்கள் புதுக்குளம் வயல் வெளியிலுள்ள காவலரணில் இளைப்பாறிய போது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நால்வரும் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டு, நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு பின்னர் விடுவிக்கப்படுவார்கள் என இராணுவத்தினர் கைது செய்யப்பட்ட இளைஞர்களின் உறவினர்களிடம் தெரிவித்தனர்.

**Patient dead in Dharmapuram hospital due to the close of Omanthai check point**
Thinakkural 08-01-2009

# வன்னிக்கான பாதை மூடப்பட்டுள்ளதால் தர்மபுரம் ஆஸ்பத்திரியில் நோயாளி மரணம்

வன்னிக்கான பாதைகள் மூடப்பட்டுள்ளதால் வவுனியா ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட வேண்டிய நோயாளர் ஒருவர் தர்மபுரம் மருத்துவமனையில் உயிரிழந்துள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது;

தற்போது 40 நோயாளர்கள் வரையில் வவுனியா கொண்டு செல்லப்பட வேண்டியுள்ளனர். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வழித்துணைக்காக நாங்கள் காத்திருக்கின்றோம்.

படையினர் போக்குவரத்து பாதையினை மூடியுள்ளதால் வவுனியாவிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு எடுத்துவரப்படும் உணவுப் பொருட்களைக் கொண்டு செல்வதிலும் தடை ஏற்பட்டுள்ளது.

உலக உணவுத் திட்டத்தின் கீழ் உணவுப் பொருட்கள் கிழமை தோறும் கொண்டு வரப்படுவது வழமை. அத்துடன், அரச அதிபர்களின் வாகனத் தொடரணிகளில் மக்களுக்கான இன்றியமையாத பொருட்கள் படையினரின் கெடுபிடிகளுக்கு மத்தியில் வன்னி வருதும் வழமை.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு 100 வாகனங்களில் உணவுப்பொருட்கள் வந்துகொண்டிருந்த சூழலில் படையினரால் கிழமையில் 40 வாகனங்களில் உணவுப் பொருட்களே அனுமதிக்கப்பட்டுள்ளன.

தற்போது போக்குவரத்துப் பாதை மூடப்பட்டுள்ளதால் கிளிநொச்சி-முல்லைத்தீவு மாவட்டங்களில் இடம்பெயர்ந்த மக்களுக்கான உலர் உணவு வழங்கும் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

1997 ஆம் ஆண்டு ஜயசிக்குறு படை நடவடிக்கையின் போது நாற்பது நாட்களுக்கு மேலாக வன்னிக்கான போக்குவரத்துப் பாதை மூடப்பட்டிருந்தமையால் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற வேண்டிய பத்துக்கும் அதிகமான நோயாளர்கள் உயிரிழந்தனர்.

மகப்பேற்று சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டிய பெண்ணொருவர் வவுனியாவுக்கு கொண்டுசெல்லப்பட்ட போது படையினர் திருப்பி அனுப்பியதால் அப்பெண் உயிரிழந்துள்ளார். 1997 ஆம் ஆண்டில் இவை நடைபெற்றன.

படையினர் இன்று பல முனைகளில் போர் நடவடிக்கையை முன்னெடுத்து வன்னி மீதான போக்குவரத்துப் பாதையினை மூடி மீண்டுமொரு பெரும் மனித அவலத்தை உருவாக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com

**Youth's dead body recovered from Unambuwa area**
Thinakkural 08-01-2009

# உனம்புவ பகுதியில் இளைஞனின் சடலம் மீட்பு

**கம்பளை நிருபர்**

கம்பளை, உனம்புவ பகுதியில் 28 வயது மதிக்கத்தக்க இளைஞனின் சடலமொன்றை நேற்று புதன்கிழமை மாலை கம்பளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

பொதுமக்கள் வழங்கிய தகவலையடுத்து உனம்புவ பீலி பாலத்திற்கடியிலிருந்து இச்சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இச்சடலத்தின் கழுத்து மற்றும் நெஞ்சுப்பகுதிகளில் வெட்டுக்காயங்கள் காணப்படுவதால் இவ்விளைஞன் கொலை செய்யப்பட்டிருக்கலாமெனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். மேலும் இவ்விளைஞன் பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவராக இருக்கலாமெனவும் பொலிஸார் நம்புகின்றனர்.

இச்சடலம் தற்போது பிரேத பரிசோதனைக்காக கம்பளை போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

கம்பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜாலிய ஹீங்ஹந்த தலைமையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

படிப்பகம்